முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை
முன்னிலை- திரு. M. பத்மநாபன், B.A.B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை
2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் நாள் வியாழக்கிழமை
வழக்கிடை மனு எண் 1/2021
உள்
அசல் வழக்கு எண் 89/2021

----

1. வாதிகள் தங்களுக்காகவும்,
அருப்புக்கோட்டை தாலுகா,
கூத்திப்பாறை உட்கிடை
மலைப்பட்டி கிராமத்தில் அமைந்திருக்கும்
ஓவம்மாள், பாவம்மாள் திருக்கோவில்
அதன் சாமி கும்பிடும் பங்காளிகளுக்காகவும்
பிரதிநிதிகள் ஸ்தானத்தில்
அதன் தலைவர் R.சுந்தரராஜ்

2. வாதிகள் தங்களுக்காகவும்,
அருப்புக்கோட்டை தாலுகா,
கூத்திப்பாறை உட்கிடை
மலைப்பட்டி கிராமத்தில் அமைந்திருக்கும்
ஓவம்மாள், பாவம்மாள் திருக்கோவில்
அதன் சாமி கும்பிடும் பங்காளிகளுக்காகவும்
பிரதிநிதிகள் ஸ்தானத்தில்
அதன் செயலாளர் K.ராமசாமி

.......மனுதாரர்கள்/வாதிகள்.

-எதிர்-

1. S. பாண்டி
2. N.ராமசாமி
3. தலைவர், மலைப்பட்டி ஊராட்சி மன்றம்,
அருப்புக்கோட்டை தாலுகா.

.......எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.

இம்மனுவானது 20-07-2022ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 27-09-2022ம் தேதியன்று இந்த நீதிமன்றம் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரரகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.I. இராமமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள்

M PADMANABAN Digitally signed by M PADMANABAN

முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்காக இருந்து வந்த இம்மனுவினை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்....

**உத்தரவு**

இந்த இடைநிலை மனு, அருப்புக்கோட்டை தாலுகா, கூத்திப்பாறை உட்கிடை மலைப்பட்டி கிராமத்தில் அமைந்திருக்கும் ஓவம்மாள், பாவம்மாள் திருக்கோவில் அதன் சாமி கும்பிடும் பங்காளிகளுக்காக பிரதிநிதிகள் ஸ்தானத்தில் அசல் வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மனுதாரர்கள்/வாதிகளுக்கு அனுமதி அளித்து உத்திரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் மனுவின் சுருக்கம்-**

**(i)** தபசில் சொத்தானது மலைப்பட்டி, நக்கலக்கோட்டை, வெள்ளையாபுரம் மற்றும் சென்னை, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பகுதிகளில் வசித்து வரும் ஓவம்மாள், பாவம்மாள் திருக்கோவில் சாமி கும்பிடும் பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டதாகும். தபசில் சொத்தின் பட்டா மேற்படி பாவம்மாள் திருக்கோவில் டிரஸ்டி என்ற பெயரில் உள்ளது. மேற்படி டிரஸ்டின் தற்போதைய தலைவராக 1ம் வாதி உள்ளார். 2ம் வாதி செயலாளராக உள்ளார். ஓவம்மாள், பாவம்மாள் திருக்கோவில் சாமி கும்பிடும் பங்காளிகள் சுமார் 150 குடும்பத்தினர் வெவ்வேறு பகுதிகளில் வசித்து வருகின்றனர். அந்த அடிப்படையில் தாவா வழக்கினை அனைவரின் சார்பிலும் தாக்கல் செய்ய கடந்த 17-07-2021-ம் தேதிய ஓவம்மாள், பாவம்மாள் திருக்கோவில் சாமி கும்பிடும் பங்காளிகள் சார்பில் தாவா வழக்கு தாக்கல் செய்ய வாதிகளுக்கு உரிமை கொடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த வகையில் அசல் வழக்கினை மேற்படி கோவிலின் பங்காளிகள் அனைவரும் சேர்ந்து சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல்

M PADMANABAN Digitally signed by M PADMANABAN

செய்வது என்பது நடைமுறைக்கு இயலாத ஒன்றாகும். அந்த அடிப்படையில் தான் மேற்படி அனைவரின் ஓட்டு மொத்த பிரதிநிதிகளாக இருந்து வாதிகள் இருவரும் சமூகம் நீதிமன்றத்தில் அசல்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். அந்த அடிப்படையில் மேற்படி ஒட்டு மொத்த வாதிகள் சார்ந்த கோவில் பங்காளிகளின் நலனிற்கு விரோதமாக இந்த வழக்கு வாதிகள் செயல்பட மாட்டார்கள். மேலும் அசல் வழக்கு சார்ந்த நடவடிக்கைகளை முறையாக மேற்படி ஒட்டு மொத்த கோவில் சாமி கும்பிடும் பங்காளிகளின் சார்பில் நீதிமன்றத்தில் சரியாக நிறைவேற்றுவோம் என்றும், இதன் மூலம் வாதிகள் உறுதி கூறுகின்றனர்.

**(ii)** அந்த அடிப்படையில் அருப்புக்கோட்டை தாலுகா, கூத்திப்பாறை உட்கிடை மலைப்பட்டி கிராமத்தில் அமைந்திருக்கும் ஓவம்மாள், பாவம்மாள் திருக்கோவில் அதன் சாமி கும்பிடும் பங்காளிகளுக்காக பிரதிநிதிகள் ஸ்தானத்தில் அசல் வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மனுதாரர்கள்/வாதிகளுக்கு அனுமதி அளித்து உத்திரவிடக்கோரி இம்மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. __1ம் எதிர்மனுதாரர் மறுப்புரையின் சுருக்கம்__ -

இந்த வழக்கில் வாதிகள் தங்களுக்காகவும், மலைப்பட்டி கிராமத்தில் அமைந்திருக்கும் ஓவம்மாள், பாவம்மாள் திருக்கோவில் அதன் சாமி கும்பிடும் பங்காளிகளுக்காக பிரதிநிதிகள் ஸ்தானத்தில் அசல் வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அனுமதி கோரியிருப்பதில் வாதிகள் யார் யாரென்ற விபரம் மனுவில் குறிப்பிடவில்லை. தாவா கோவிலுக்கு டிரஸ்டி என்ற பெயரில் பட்டா இருப்பதாக கூறியிருப்பதில் அந்த டிரஸ்டி மூலமாக வழக்கு தாக்கல் செய்யாமல் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு அதன் தலைவருக்கும், செயலாளருக்கும் உரிமை வழங்கப்படவில்லை. எந்தவிதத்திலும் இந்த வழக்கு

M PADMANABAN Digitally signed by M PADMANABAN

சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. இம்மனு வீணானது. அலைக்கழிவானது.

4. **பிரச்சினை :-**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், மனுதாரர்கள் கோரியபடி, அருப்புக்கோட்டை தாலுகா, கூத்திப்பாறை உட்கிடை மலைப்பட்டி கிராமத்தில் அமைந்திருக்கும் ஓவம்மாள், பாவம்மாள் திருக்கோவில் அதன் சாமி கும்பிடும் பங்காளிகளுக்காக பிரதிநிதிகள் ஸ்தானத்தில் அசல் வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மனுதாரர்கள்/வாதிகளுக்கு அனுமதி அளித்து உத்திரவிட இயலுமா?. என்பதே ஆகும்.

(i) இருதரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதிகள் அசல் வழக்கில் தங்களுக்காகவும், அருப்புக்கோட்டை தாலுகா, கூத்திப்பாறை உட்கடை, மலையப்பட்டி கிராமத்தில் அமைந்திருக்கும் ஓவம்மாள், பாவம்மாள் திருக்கோவில் சாமி கும்பிடும் பங்காளிகளுக்காகவும், பிரதிநிதிகள் ஸ்தானத்தில் தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. அசல்வழக்கு பிரதிநிதி ஸ்தானத்தில் நடத்த அனுமதி கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எதிர்மனுதாரர் தரப்பில் தாவாக் கோவிலுக்கு டிரஸ்டி பெயரில் பட்டா இருப்பதாக பிராதில் கூறியிருப்பது டிரஸ்டி மூலம் வழக்கு தாக்கல் செய்யாமல் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்ன? என்று பிராதில் குறிப்பிடவில்லை என்றும், மனுதாரர்கள் இருவரும் தலைவர் செயலாளர் பிரதிநிதிகளாக இருந்து வழக்குத் தாக்கல் செய்ய உரிமை வழங்கப்படவில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கு இவ்வழக்கை பிரதிநிதிகள் ஸ்தானத்தில் தாக்கல் செய்வதற்கு உரிமை உள்ளதா? என்பதை வழக்கின் இறுதியில்தான் கண்டறியமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர்கள் டிரஸ்டி மூலம் வழக்குத் தாக்கல்

M PADMANABAN
Digitally signed by M PADMANABAN

செய்யாமல் பிரதிநிதி ஸ்தானத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கான காரணத்தை வழக்கின் இறுதியில்தான் கண்டறிய இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரர்களை பிரதிநிதிகள் ஸ்தானத்தில் இவ்வழக்கை நடத்துவதற்கு அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. எனவே, மனுதாரர்களின் மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, மனுதாரர்களின் இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

மேற்படி உத்தரவு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் நாள் பகரப்பட்டது.

M PADMANABAN Digitally signed by M PADMANABAN

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>** இல்லை.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>** இல்லை.

M PADMANABAN Digitally signed by M PADMANABAN

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை,

---------------------------------------------------------------

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை,
இடைநிலை மனு எண் *1/2021*
உள்
அசல் வழக்கு எண். *89/2021*
வரைவு/சீரான உத்தரவு
நாள் *13/10/2022.*

---------------------------------------------------------------